1972 மார்ச் 13]

பர்மா அகதிகள் கடைகள் வைக்க கட்டட வசதிகள்

* 460 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டித்தர செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இன்றைக்கு சென்னையில் பாரி முனையிலிருந்து கடற்கரை ரயில்வே நிலையம் வரையில் அமைந்திருக்கின்ற பர்மா பஜாரினால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. எனவே, அந்த பர்மா பஜாரை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அங்கே இருந்து பர்மா பஜாரை மாற்றித்தர வேண்டுமென்று என்னிடத்திலே மனு கொடுக்கப்பட்டது. அரசாங்கம் அதைப் பரிசிலனை செய்து, பர்மா பஜார் அமைப்பதற்கான பல இடங்களை தேர்வு செய்தது. ஆனால் அந்த மக்கள் அந்த இடங்களை விரும்பவில்லை. அவர்களுக்கு தக்க இடத்தினை தேர்ந்தெடுப்பதில் அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது.

* 472 வின—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து தஞ்சை, புதுக்கோட்டை வழியாக மதுரை வரை பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, என்னுடைய கேள்விகள் 470, 471, 472 ஆகிய எல்லாவற்றுக்கும் அமைச்சரவர்கள் இல்லை, இல்லை, இல்லை என்று சொல்லிவிட்டார்கள். புதிய அரசு வந்த பிறகு மாயூரம் முதல்நிலை நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. மாயூரத்திலிருந்து மதுரை செல்லவேண்டுமானால் ரயில் மூலமாக செல்வதை விட, மாயூரத்திலிருந்து தஞ்சை, புதுக்கோட்டை வழியாக பஸ் மூலம் சென்றால் ஏறக்குறைய 30 மைல்களுக்குமேல் குறைவாக